**தலைப்பு 268 – கிளிநொச்சி மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 268 – கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ்விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது,மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 I (ஈ) உப பிரிவின் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னையை ஆண்டுடன் இணங்குவதாகுகவும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திறைசேரி அச்சுப்பதிப்பின் பிரகாரம் பொதுவைப்பு பெறுவனவு ரூபா 135,011,471 ஆக உள்ள போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் பொதுவைப்பு பெறுவனவு ரூபா 136,493,748 ஆக ரூபா 1,482,277 தொகையால் மிகைப்படுத்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | ரூபா 1,482,277 வடமாகாண பெறுவனவுகள் ஆகும். வருட இறுதியில் நிலுவைகள் எதுவும் காணப்படமாட்டாது. ஆதலால் மீளாய்வாண்டில் திறைசேரி அச்சுப்பதிப்பில் இவை காட்டப்படமாட்டாது. | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல் களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரி அச்சுப்பதிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் முடிவுறுத்தல் செய்யப்பட்டு ரூபா 1,675,760 காசாக பெற்றுக்கொள்ளப்பட்ட போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையில் சொத்து விற்பனை பெறுவனவாக ரூபா 1,907,731 வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால் வருமான பெறுவனவு 231,971 ரூபாவால் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் இருந்து மீளவும் கிடைக்கப்பெற்ற வருமான தலைப்புக்களின் கூட்டுத்தொகை சரிபார்க்கப்பட்டு மேலதிகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களின் 20 காணிகளின் பெறுமதி ரூபா 334,395,000 மீளாய்வாண்டின் நிதிநிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அவற்றில் ரூபா 202,870,000 பெறுமதியான 13 காணிகளின் உரித்தாக்கப்பட்ட சட்டரீதியான ஆவணங்கள் காணப்பட்டிருக்கவில்லை. | மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் காணிகளில் கையளிப்பு நடவடிக்கைகள் முழுமையடையாது தொடர் நடவடிக்கையிலுள்ள காணிகள் தொடர்பில் அலுவலர்குழு ஒன்று அமைக்கப்பட்டு திரட்டப்படும் திருத்தமான தகவல்கள் மிகவிரைவில் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும். | காணிகளுக்கான உரிமைச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 464 ஆம் அத்தியாயம் 19(2) ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட 132 காணி அனுமதிப் பத்திரங்கள் உரிய நபர்களுக்கு வழங்கப்படாமல் கண்டாவளை பிரதேச செயலகத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காணி அனுமதிப் பத்திரங்கள் உரிய நபர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அனுமதிப் பத்திரங்கள் உரிய நபர்களுக்கு உடனடியாக வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காணி ஆணையாளர் திணைக்களத்தின் 1996 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 96/05 இலக்க சுற்றுநிருபத்தின் 5(iii), 6(இ) ஆம் பந்தி | கரைச்சி பிரதேச செயலகத்தால் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கு 2005 தொடக்கம் 2023 வரை வருடாந்த குத்தகை நிலுவை மற்றும் குற்றப்பணம் ரூபா 3,129,750 அறவீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | குறித்த தொகையினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு குத்தகை நிலுவை அறவிடப்பட வேண்டும். |

## 2.2 முற்பணக் கொடுப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர் முற்பணக்கணக்கு இணக்கக்கூற்றின் பிரகாரம் பதவியிலிருந்து விலகிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 114,230 ஆனது கடந்த 13 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டிருந்தன. | நிலுவை படிப்படியாக அறவிடப்படுகின்றது. | நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு அமைச்சுகள் மற்றும் நிகழ்ச்சி திட்டத்தின் நிதிப் பங்களிப்பில் வெல்லஉற்பத்தி, பதநீர் அடைத்தல், கள் அடைத்தல், பழங்கள் மற்றும் மரக்கறிகளை பதனிடல், பப்பட உற்பத்தி, தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் பொதியிடல் தொடர்பான கைத்தொழில் நடவடிக்கைகளிற்கு மாவட்டச் செயலகத்தினால் ரூபா 62.64 கூட்டுத்தொகைக்கு கொள்வனவுசெய்யப்பட்ட இயந்திர உபகரணத் தொகுதிகள், கட்டிட புனர்நிர்மாணம் மற்றும் உற்பத்தி நிலையம் என்பன 04 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 02 கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கையளிக்கப்பட்டிருந்தும் அவை 5 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் காணப்படுகிறது. | நாளாந்த மூலப்பொருள் கிடைப்பனவு போதியளவு இன்மை, உற்பத்திச் செலவு அதிகரிப்பு சந்தை வாய்ப்பின்மை, மூன்றுநிலை மின்சாரம் இன்மை, உற்பத்தி இயந்திரத் தொகுதி நிறுத்தப்பட்டுள்ள கட்டடத்தின் இடவசதி பொருத்தப்பாடின்மை காரணமாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. | குறித்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் குடியிருப்பதற்கு வீடு இல்லை என இனங்காணப்பட்ட மக்களுக்கு ரூபா 31,590,000 பெறுமதியில் அமைக்கப்பட்ட 55 எண்ணிக்கையான வீடுகளில் கடந்த 1 தொடக்கம் 4 வருடங்களாக மக்கள் குடியிருக்காமல் அவ்வீடுகளை சுற்றி பற்றைகள் வளர்ந்து பயன்பாடற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிரந்தர வீடுகளில் 55 வீடுகளில் மருத்துவ சிகிச்சைக்காக சென்றமை, துணையை இழந்து தனிநபராக வசிக்கின்றமை, மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றவர்கள் அடங்குகின்றனர். இவர்கள் மீளவும் வந்து வசிப்பார்கள். | கொள்கை முடிவுகளை மறுபரிசீலனை செய்த பிறகு வீடு அதிகம் தேவையான வர்களிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 4,600,000 பெறுமதியான 04 பொதுமண்டபங்கள் மற்றும் கட்டிடங்கள் 01 தொடக்கம் 10 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. | மண்டபத்தின் கூரைப்பகுதியானது சேதமடைந்துள்ளமை, மீனவர்கள் ஓய்வு விடுதியானது திறப்புவிழா செய்யப்படாமை, புலோப்பளை மண்டபத்திற்குச் செல்லும் வீதி சேதமடைந்துள்ளமை, இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வம் காட்டாமை போன்ற காரணங்களால் பயன்பாடின்றி காணப்படுகின்றன. | சொத்துக்களை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்த ஆக்கபூர்வமான செயற் திட்டங்கள் செயற் படுத்தப்படல் வேண்டும். |

**3.3 நட்டங்களும் சேதங்களும்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கண்டாவளை சமுர்த்தி வங்கியில் காசுப் பெறுவனவு புத்தக பௌதீக இருப்பிற்கும் அச்சிடப்பட்ட இருப்பிற்குமிடையே 200 காசுப் பெறுவனவு புத்தகங்கள் பற்றாக்குறையாக காணப்பட்டது. இது தொடர்பில் சமுர்த்தி வங்கிச் சங்க நெறிப்படுத்தல் கையேடு 12 இன் பந்தி 3.6 இன் பிரகாரம் சமுர்த்தி முகாமையாளர் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து காசுப் பெறுவனவு புத்தகங்கள் காணாமல் போனமை தொடர்பாக புத்தகமொன்றிற்கு ரூபா 25,000 விகிதம் மொத்தமாக ரூபா 5,000,000 தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது. | இவ்விடயம் தொடர்பில் மாவட்ட செயலகம் அதிகார கையளிப்பினை வழங்குவதில்லை. இதனால் மாவட்டச் செயலகம் இவ்விடயத்திற்கு கணக்களி தகமை கொண்டதில்லை. | குறித்த விடயத்திற்கு பொறுப்பான அதிகாரியிடம் அறிக்கையிடப்பட்டு, முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்பட்டவாறு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் 4 பிரதேச செயலகங்களின் 4 வகையான பதவி அணியினருக்கான 28 பதவியினர் வெற்றிடமாகவும் மற்றும் 118 பதவியினர் மேலதிகமாகவும் மீளாய்வாண்டில் இறுதியில் காணப்பட்டிருந்தனர். | அரசசேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சினால் நேரடியாக நாடாளாவிய அளவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களின் போது பதவி வெற்றிடம் கவனத்தில் எடுக்கப்படவில்லை. | பதவி அணியினர் தொடர்பில் மீளாய்வினை மேற்கொண்டு தேவைக்கேற்ப வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிக பதவியினருக்கான அனுமதியினைப் பெற்றுக்கொள்ள அல்லது வேறு நிறுவனங்களிற்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு மேலாக இடமாற்றம் இன்றி 315 அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒரே சேவை நிலையத்தில் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | சேவைக்காலம் கருத்தில் கொள்ளப்பட்டு பணி இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |